அக்டோபர்: 29

## வேதத்தை மறந்தால் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்.

### வாசிக்க: ஓசியா 4:1-6

நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன். ஓசியா 4:6. வேதத்தை கற்றிருந்தால் தான் எது சரி எது பிழை, என்னுடைய வாழ்க்கை தேவனுக்கு உகந்ததா? அவர் என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார் போன்றன தெரியவரும். வேதத்தை நாற்பதுக்கு மேற்பட்ட மனிதர்கள் எழுதியிருந்தாலும் அதன் ஆசிரியர் தேவ ஆவியானவரே. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் வேதத்தின் ஒரு உறுப்பும் ஒழியாது (மத் 5:8, 24:35) என்று சொல்லப்பட்டுள்ளது. வேதத்தை வாசிக்கும் பொழுது ஆண்டவரோடு பேசுகிறேன் என்ற உணர்விருக்க வேண்டும். இந்த 4ம் அதிகாரத்தின் ஆரம்பத்தில் பார்த்தால் இஸ்ரவேல் மக்களிடம் உண்மையில்லை, இரக்கமில்லை தேவனைப்பற்றிய அறிவுமில்லை பொய்யாணையிட்டு, பொய்சொல்லி, கொலைசெய்து, திருடி, விபச்சாரம் செய்து அழிந்து போகிறார்கள். ஆசாரியர்கள் கூட வேதத்தை கற்காத நிலை கானப்படுகிறது. பெற்றேரின் அறிவும் அனுபவமும் தான் பிள்ளைகளுக்கு கடத்தப்படும். பெற்றோர் வேதத்தை வாசிக்கும் அனுபவம் உள்ளவர்களாயிருந்தால் பிள்ளைகளும் அதை பின்தொடர்வார்கள். வேதத்தை புறக்கணித்து பாவ வாழ்க்கை வாழ்ந்தால் பிள்ளைகளும் அதையே பின்தொடர்வார்கள். பரிசுத்தசந்ததியை உருவாக்கும் பொறுப்பு கடமை பெற்றோரிடமுள்ளது. அதனாலேயே கர்த்தர் இவ்வாறு எச்சரிக்கிறார்.

கேள்வி:
ஓசியாவின் பிள்ளைகளின் நிலை என்ன?

பதில்:
கர்த்தரின் தயவை இரக்கத்தை அன்பை ஓசியா 1:2ல் பர்க்கலாம். கர்த்தர் ஓசியாவிடம் கோமேரை மணந்து கொள் என்று சொன்ன வேளை அவளுக்கு முன் இருந்த பிள்ளைகளையும் சேர்த்துக் கொள் என்றே கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தரின் கரிசனையை பார்த்தீர்களா? எந்தப் பிள்ளையும் அநாதையாகப் போக கர்த்தர் அனுமதியார். ஓசியா பிள்ளைகளுக்கு வேதத்தை கற்று கொடுத்திருப்பார். ஒருசில பெற்றோர் தமது பிள்ளைகள் கீழ்ப்படியாமல் தொடர்ந்து தொந்தரவு செய்தால். ஒழிந்து போ என திட்டுவதை பார்த்திருக்கிறோம். உண்மையில் அவர்கள் ஒழிந்து போக வேண்டும் என்ற அர்த்தத்தில் சொல்லுவதில்லை. எந்த பெற்றோருக்கும் அவ்வாறு நடப்பது பிரியமுமில்லை. ஆத்திரத்தின் நிமிர்த்தம் பொறுமையிழந்து அப்படி வார்த்தைகளை சொல்லிவிடுவது. இப்படிப்பட்ட மனநிலையில் தான் கர்த்தர் இஸ்ரவேலைப்பார்த்து இவ்வாறு சொன்னார். பிள்ளைகளே ஒருவேளை உங்கள் பெற்றோர். வேதத்தை வாசிப்பதில் அல்லது ஜெபிப்பதில் அக்கறையீனமாக இருந்தால். நீங்கள் உங்கள் பெற்றோரிடம் போய் சொல்ல வேண்டும். நான் பரீட்சையில் சித்தி பெற வேண்டும் என்றால், என்னுடைய வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டும் என்றால் அம்மா, அப்பா நீங்கள் வேதத்தை வாசிக்க வேண்டும், ஜெபிக்க வேண்டும் என்று சொல்லி ஓசியா 4:6 ஐ வாசித்து காட்டுங்கள்.

**கர்த்தருடைய** வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். **சங்கீதம் 1:2**

ஜெபம்

அன்பும் கிருபையும் நிறந்த தகப்பனே. வேதத்தை வாசிப்பதோடில்லாமல். அதில் சொல்லப்பட்டபடி எங்கள் வாழ்க்கையிருப்பதாக. பக்தி வைராக்கியமுள்ள சந்ததியை உருவாக்குவோமாக. ஆமென்